2017 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, துறை அலுவலர்களால் ஆய்வு மேற்கொண்டு, நிறைவேற்ற வாய்ப்பிருப்பின் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

(அ) பேரவைத் தலைவர் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு பிரச்சினைகளைக் குறித்து விளக்கம் பெற நான் விரும்புகிறேன். ஒன்று தங்களிடம், இன்னொன்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம். தங்களிடம் நான் தெரிந்துகொள்ள விரும்புவது, இரவு 2–00 மணிக்கு நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் உடல்நலமற்று அப்பல்லோ மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார்கள். எனவே, அவருடைய உடல்நலம் எப்படி இருக்கிறது என்பதை இந்த மன்றம் அறிய ஆவலுடன் இருக்கிறது. நன்றாக இருப்பார்கள் என்றுதான் நினைக்கிறோம், சொல்லுங்கள்.*

[2017 ஜூலை 4

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அவர் நன்றாக இருக்கிறார். இன்றைக்கு* discharge *ஆகிவிடுவார். நாளைக்கு வந்து, இந்த அவையை நடத்துவார்.*

திரு. துரைமுருகன்: *மிக்க நன்றி. மகிழ்ச்சி.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நான் இன்று காலை மருத்துவமனைக்குச் சென்று பார்த்துவிட்டு வந்தேன். காலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சென்று பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நன்கு ஆரோக்கியமாக இருக்கிறார்கள். நாளைக்கு வந்து சபையை நடத்துவார்கள்.*

திரு. துரைமுருகன்: *மிகவும் நல்ல செய்தி, மகிழ்ச்சிக்குரியது.*

(ஆ) திரைப்படங்களுக்கு ஜி.எஸ்.டி. வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கக்கோரி திரையரங்குகள் மூடப்பட்டிருப்பது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டாவதாக ஒரு தகவலை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்க விரும்புகிறேன்.* GST *வந்தால் சர்வரோக நிவாரணியாக இருக்கும் என்று சொன்னார்கள். இருக்கட்டும் பரவாயில்லை, வறியோர்களைப் பொறுத்தவரையில். ஆனால், தியேட்டர்காரர்களைப் பொறுத்தவரையில் அது சர்வரோகமாகத்தான் இருக்கிறது. காரணம்,* GST *வந்தும் பல பிரச்சினைகள் தீரவில்லையென்றும், கேளிக்கை வரி கூடவேயிருக்கிறது என்ற காரணத்தாலும். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் இதுகுறித்து அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது.*

திரு. துரைமுருகன்: *இல்லையில்லை. ஆயிரம் தியேட்டர்கள் மூடப்பட்டிருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். அது ஆய்வில் இருக்கிறது.*